'Sripathi',
Veerabhadra Gardens,
Pattom Palace P.O.,
Thiruvananthapuram - 695 004
Phone : 0471 - 445563, 447609

K. S. Nandhini Krishnan

# திருப்பள்ளி எழுச்சி

இராகம் - பூபாளம்

1) ஸ்வர்ண காமாக்ஷி பள்ளி எழாயோ,
பால் வடியும் திருமுகம் தெரிந்து பாராயோ,
பச்சைக் கிளிகள் கூவுது கேளாயோ,
கன்றுகள் பசுவை தேடுது காணாயோ.

2) காவிரி நல் நதி பாயும் காட்சி காணாயோ,
நெற் களஞ்சியத்தில் உழவர் உழைப்பது பாராயோ,
ஊரெல்லாம் பெண்டிர் கோலமிடக் காணாயோ,
சிறு பிள்ளைகள் பால் வேண்டி அழுவதும் கேளாயோ.

3) பாரெல்லாம் பாடி துதிப்பது பாராயோ
கணபதி கந்தனும் உனை தேடிவர வாராயோ
கதிரவன் ஒளி தூக்க உதித்தான் காணாயோ
அன்னையே பள்ளி எழுந்தருளாயோ
யோக நித்திரையினின்றும் மீண்டு வாராயோ.

× — ×

II) இராகம் : சங்கராபரணம்

1) வாழியவே, வாழியவே ஸ்வர்ண காமாக்ஷி நீயே
நாற்றிசையும் கைகூட வந்தோம், உன்தன் புகழ் பாட.
2) மஞ்சள் பூசி, மாலை சாற்றி, அபிஷேகம் நடத்தவே,
எண்ணெய், பால், நெய், தேன், தயிரொடு, சந்தனமும் கூடவே.
3) சாந்து பொட்டு, பூவு சாம்பிராணி, அத்தரும் பூசிடவே,
அலங்கார பட்டுடுத்தி, ஆயிரம் மாலைகள் சாற்றி.
4) அன்னை வாக்கை தன்னில் கரும்பு வில்லை ஏந்தியே,
ஸ்வர்ண வல்லி காமாக்ஷியாய் காட்சியும் நீ தந்திடவே,

'Sripathi',
Veerabhadra Gardens,
Pattom Palace P.O.,
Thiruvananthapuram - 695 004
Phone : 0471 - 445563, 447609

*K. S. Nandhini Krishnan*

5) பக்தர் கூட்டம் கூடி நின்று நெக்குருகிப் பாடவே,
நாற்றிசையும் நலம் பெறவே வரங்களும் நீ நல்கவே.
6) மாதம் மும்மாரி பெய்து நெற் தானியங்கள் விளையவே
முப்பத்து முக்கோடி தேவர்களும் வணங்கவே.

x — x

III) இராகம்: ஸிந்து பைரவி. தாளம் - ஆதி.

பல்லவி.

/சங்கீதம் பாடினோம் நாம/ சங்கீர்த்தனம் பாடினோம் நீ... // (சங்)

அ. ப.

/வாத்யங்கள் யாம் இசைத்தோம் // (2) (இனிய)
/இயல் இசை நாடகங்கள் இயற்றினோம் நீ.... // (சங்கீதம்)

சரணம்

/மத்தள, மேளங்களும், பேரி/ சங்கங்கள் கீதங்களும் //
/நாட்யங்கள் பல ஆடினோம் தக திமி (2) (கோஷ்டி)
/பூஜைகள் யாம் செய்கின்றோம் //
/ஸ்வர்ண காமாக்ஷி உன்றனுக்கே/இங்கு வா வா நீ (2) மகிழ்ந்தே // (சங்கீதம்)

x — x

'Sripathi',
Veerabhadra Gardens,
Pattom Palace P.O.,
Thiruvananthapuram - 695 004
Phone : 0471 - 445563, 447609

*K. S. Nandhini Krishnan*

IV) ராகம் - ஸஹானா - தாளம் - ஆதி.

பல்லவி.

;பூஜித்தோமே புஷ்ப மலையாலே யாம் ||
;சேவித்தோமே ஸ்ருங்/க மலையாலே அம்மா ||

அ.ப

;பாயஸம் அப்பம் வடை |; அன்னமும் பருப்பும் ||
;ஆயிரம் பழங்களுடன் |; தூளிர் வெற்றிலையும் ||. (பூஜித்தோமே)

சரணம்

;ஸ்ருங்கார பட்டாடை |; தங்கென்று ஆடையணை ||
;திருமங்கல்யமும் |; திருக் கண் மலரும் |
;வளையலும் அட்டியலும் |; சிறு சிறு கொலுசும் ||
;திருமேனி அலங்கரித்து |; ஸ்வர்ண கிரீடமும் || (பூஜித்தோமே)

x — x.

V) ராகம் - மத்யமாவதி (5 கட்டை)

ப.

1) அம்பா கல்யாண வைபோகமே | ஸ்வர்ண காமாக்ஷி கல்யாண வைபோகமே - ||

அ.ப.

2) பாமேஸர் தவம் தன்னை மன்மதன் கலைக்க | ஈஸ்வரியின் மீது ரதி லங்கித்தார ||

சரணம்

3) நந்தியின் மத்தளம் நாற்றிசையும் முழங்க | சாமேஸர் காமாக்ஷி, கைத்தலம் பற்ற ||
4) கந்தர்வர் இசை முழங்கத் தேவர் பூமழை சொட | திருமூர்த்திகளும் தேவியுடன் ஆசிகள் வழங்க ||
(அம்பா கல்யாண)

x — x

'Sripathi',
Veerabhadra Gardens,
Pattom Palace P.O.,
Thiruvananthapuram - 695 004
Phone : 0471 - 445563, 447609

*K. S. Nandhini Krishnan*

VI) வாழி        தாளம் - ஆதி

1) வாழி வாழி வாழி ; ஸ்வர்ண காமாக்ஷி வாழி || அம்மா உனைக் குறித்து ; பாட வந்தேன் வாழி ||

2) ; காமேசர் இட்ட பெட்டு ; உல்லாச ஒலி கேட்டு || ; பாட வந்தேன் வாழி ; ஸ்வர்ண வல்லி வாழி ||

3) ; சந்த்ரானுக்கோ ; தந்த மய ஊஞ்சலில் || ; சிங்காரமாகவே ; ஆடும் இசை கேட்டு || (வாழி)

4) ; சோமேஸ்வரன் அவர் ; கை பற்றி நடக்க || ; கலகலவென வளை ; ஒலி சிணுங்க.. கேட்டு || (வாழி)

5) ; சிம்மாசனம் தன்னில் ; ஏறும் போது ; மணி மய || ; தொங்கும் சிலிர்ப்பிட ; சங்கீதம் பாட || (வாழி)

6) ; இன்றியும் உனையும் ; குங்குமம் தானே || ; மங்களம் அருள்வாய் ; மாதவத்தாளே || (வாழி)

7) ; இறைவன் கையால் ; நாதருடன் ஆட || ; கல்யாண கோலம் கண்டு ; பாட வந்தேன் வாழி ||
(வாழி).

x — x.

VII நலங்கு · சங்கராபரணம் . தாளம் - ஆதி.

1) காமேசர் காமாக்ஷி நலங்கிட வாரீர் || இருவரும் ஒப்புடன் விளையாடுவார் பாரீர் || (பாரீர்)

2) மஞ்சள் இட்டு அழகைக் கண்ண மணம் தேடி வாரீர் || மாங்கல்யம் திகழ்ந்திருக்க நடை அழகு பாரீர் || (பாரீர்)

3) சந்தனம் பூசுகிறார் கண்டுகளி காணீர் || குங்குமம் இடுகின்றார் கோலம் பாரீர் || (பாரீர்)

4) தேங்காயை உருட்டுகிறார் வெகுளி கேளீர் || சித்தம் திருப்பவே சிரிக்கின்றார் கேளீர் || (கேளீர்)

5) அரிசியும் பருப்புமே கொடுக்கின்றார் காணீர் || தங்கமெனும் கையிலே கிள்ளுகின்றார் காணீர் ||
(காணீர்)

6) சிங்காரமாகவே சிகையை சீவுகின்றார் காணீர் || பூச்சூடி சிரித்தெனது இருக்கின்றார் காணீர் ||
(காணீர்)

7) பாட்டென்று பாடென்று கெஞ்சுகின்றார் கேளீர் || மங்களமாய் பெண்கள் பாடுவதை
கேளீர் || (கேளீர்)

8) வாழியவே வாழியவே பல்லாண்டு நீவீர் || விண்ணவர் தந்த நெத்தார கண்டு மனம்
மகிழ்வீர் (வாழீர்)

x — x.

'Sripathi',
Veerabhadra Gardens,
Pattom Palace P.O.,
Thiruvananthapuram - 695 004
Phone : 0471 - 445563, 447609

*K. S. Nandhini Krishnan*

கும்மி ஆரதி.

1) / கும்மியடி பெண்ணே கும்மியடி தேவி / காமாக்ஷியை வலம் வந்து அடி //
/ மங்கலம் எங்கும் தங்கள் நிலைத்திட / கும்மியடி பெண்ணே / கும்மியடி /
2) / தேவர்கள் யாகத்தில் தோன்றிட்ட லலிதையை / சுற்றி வந்தே பெண்ணே / கும்மியடி //
/ கும்மியடி பெண்ணே கும்மியடி தேவி / காமாக்ஷியை வலம் / வந்து அடி //.
3) / காமேஸ்வரனை கல்யாணம் செய்திட்ட / சிம்ம வாஹினியை / சுற்றி அடி //
/ கும்மியடி பெண்ணே கும்மியடி ஸ்வர்ண / காமாக்ஷியை வலம் / வந்து அடி //
4) / ஸ்யாமளா, வாராஹி, அஸ்வாரூடா என்று / சேனைகள் சூழ்ந்திட்ட / அம்பிகையை //
/ சுற்றி வந்தே பெண்ணே கும்மியடி / கும்மியடி பெண்ணே / கும்மியடி //.
5) / மஹிஷனை அழித்திட்ட லோக நாயகி / மனம் குளிரவே வலம் / வந்தடி //
/ கும்மியடி பெண்ணே கும்மியடி / சுற்றி வந்தே பெண்ணே / கும்மியடி //
6) / மாலவன் சோதரி, கணபதி, ஸ்கந்தன் / தாயினை சுற்றியே / கும்மியடி //
/ கும்மியடி பெண்ணே கும்மியடி / ஸ்வர்ண / காமாக்ஷியை சுற்றி / கும்மியடி //

x — x

பதிகம்

மத்யமாவதி - இராகம்

/ மஹிஷனை அழித்திட்ட சக்தியே நீ என் தன் மனம் தனில் கலந்திடுவாய்
லோகமாதா நீ //
/ மாதவன் யாதவன், கம்ஸனை வதைத்திட்ட கோவிந்தனின், கார் முகில் வண்ணனின் சோதரியாய் நீ //
/ உக்ரிணி, மந்த்ரிணி, ஆகாச மந்த்ரிணி, பூமியில் பஞ்சத்தை போக்கிட மழையென பொழிவாயே நீ //
/ காட்டாளர், காபாலி கூட்டாளர், ஆணவம் அகற்றியே அழித்திடுவாய் நீ //
/ அங்க வீனங்கள், ரோகங்கள், மன வியாகுலங்கள், ஆவியாய் பறந்திட அருளிடுவாய் நீ //
/ அம்மா என் ஆத்தாளே, அண்டங்கள் காத்தாளே, ஆயிரம் கண்ணுடையாளே நீ /
/ காமாக்ஷி, கௌமாரி, ஸ்வர்ண வல்லி நீ, சொர்ணமாய் நிதமே வருவாயே நீ //

x — x

*K. S. Nandhini Krishnan*

'Sripathi',
Veerabhadra Gardens,
Pattom Palace P.O.,
Thiruvananthapuram - 695 004
Phone : 0471 - 445563, 447609

கும்மி

1) சிம்ம வாஹினி சக்தி தேவி / சிம்மாசனம் ஏறி / அமர்ந்துவிட்டாள் //
/ கன்னியும் புரியில் குடை பிடிக்கவே / வெண் சாமரம் வீச / கொலுவிருக்கிறாள் //
2) / பாதத்தில் பக்தரின் படை சூழவே / பல்லாயிரம் ஆண்டு / எழிலுடனே //
/ எல்லோரும் நோக்கிடும் எண்ணிலா பாக்யங்கள் / உண்டாகவே / அமர்ந்துவிட்டாள் //
3) ஊரும் உலகமும் உன்னையே உணர்ந்து / தேடி வந்தாரே / உன்னைக் காண //
/ பாடல்கள் பாடல்கள் கவி பாடி சேவைகள் / சங்கடங்கள் தீர்ப்பாள் / கனிவுடனே //

x — x

பூபாளம் - இராகம்   தாளம் - ஆதி.

பல்லவி.

/; கனகக் கண்மணியே /; என்னை / காப்பாய் //. /; இனி மறந்து வந்தவே /; இனிய / கனவினிலே. (கனகக்)

அ. ப.

/; சீரும் சிறப்புமாய் /; சிங்காரச் / சிரிப்பாலே //. /; உலகத்தை உய்விப்பாய் /; ஞான / நாயகியே //

சரணம்

1) /; ஏழை எளியோரின் /; கண்ணீரைத் / துடைத்தாயே //. /; உள்ளம் உருகிதே /; உன்னையே உணர்ந்தோமே //
/; கன்னியும் ஊரும் /; தேவி காமாக்ஷியே //. /; உலகம் உய்யவே /; உதித்தாய் / கனிவாலே //
2) /; செல்வத்தாலே /; வெல்லம் வாழ / பூஜித்தேன் //. /; சந்தனத்தாலே /; தேனும் வாழ / பூஜித்தேன் //.
/; மஞ்சள் மலராலே /; உன் தாழ் / பூஜித்தேன் //. /; மங்கள வல்லி நீ /; உடன் வாழ / பூஜித்தேன் //.

x — x

'Sripathi',
Veerabhadra Gardens,
Pattom Palace P.O.,
Thiruvananthapuram - 695 004
Phone : 0471 - 445563, 447609

*K. S. Nandhini Krishnan*

நாதநாமக்ரியை - இராகம் . ஆதி.

பல்லவி

/இன்னியூர் புரியில் களைத்து தேர் விட //. / ஆயிரங்கால் மண்டபத்தில் வெள்ளி ஊஞ்சலாட //.

அ.ப.

/மனதார கண்டு நான் கவி பல பாட //. / கம்பனும் காளிதாசனும் மனம் கனிந்தாட (இன்னியூர்)

சரணம்

/சிங்காரத் தமிழினில் சிந்துகள் பாட //. / அப்பர், சம்பந்தர் சுந்தரர் மகிழ்ந்து கேட்க //

/அஷ்ட திக்கெங்கும் கூடி நின்றாட /// ஸ்வர்ண வல்லி நீயும் பிறைசூடன் போட // (இன்னியூர்)

x — x

இராகம் - பைரவி - தாளம் - ஆதி.

பல்லவி

/; நாடகமென்ன /; நாயகியே // /; நலம் பல தருவாய் /; நல் மணியே //

அ-ப.

/; வீணையை மீட்டிடும் /; கை விரலாலே //. /; எம் மனதை மீட்டிய /; தென்ன இல்லாதே //
(நாடகமென்ன)

சரணம்

/; மாதுளம் முத்தாய் /; இனித்ததென்ன / நாவில் //. /; தேன் துளி பாடலாய் /; வார்த்ததென்ன //.

/; ஸ்வர்ண காமாக்ஷி உன்னை /; நினைத்ததென்ன //; பேதை நீயும் /; வந்ததென்ன //.
(இன்னியூர்)
நாடகமென்ன -

x — x

'Sripathi',
Veerabhadra Gardens,
Pattom Palace P.O.,
Thiruvananthapuram - 695 004
Phone : 0471 - 445563, 447609

*K. S. Nandhini Krishnan*

இராகம் - ஸுப பந்துவராளி. தாளம் - ஆதி.

பல்லவி.

/; சங்கடம் நீக்கிடவே /; சிங்கார/மாய் நீ வா//. /; சிம்ம வாஹனத்தில் ஏறிப்
பாய்ந்தே நீ வா//.

அ.ப.

/; சக்தியின் சொரூபிணி /; உலகிற்கெல்லாம் உணர்க்க//. /; துக்கமெல்லாம் போக்கிட
/; லலிதாம்பிகையே வா // (சங்கடம்).

சரணம்

/; மலரும் மாலையும் /; தனமும் /தானமும் //. /; யாவும் நீயே /; என உணர்ந்தேனே//

'Sripathi',
Veerabhadra Gardens,
Pattom Palace P.O.,
Thiruvananthapuram - 695 004
Phone : 0471 - 445563, 447609

*K. S. Nandhini Krishnan*

இராகம் - ஸாமா தாளம் - ஆதி.

பல்லவி.

/; திருவருள் புரிவாயோ /துங்க//. /தேரினில் நீ /; வந்தருள்வாயோ//.

அ.ப.

/; திமி திமி திமி என /; மத்தளம் முழங்க//. /; தேரோடும் வீதியில் நீ/
திங்களென விளங்க// (திரு)

சரணம்

/; தக தக தக வென /; தீபமாய் ஜொலிப்பாயோ//. /; பட பட பட வென/; மழையாய்
பொழிவாயோ//
/; அதுவெல்லாம் தேனாய் /; அருள் புரிவாயோ //. /; ஸ்வர்ணாம்பிகையே /ஸ்வர்ண மழைதான்
பொழிவாயோ// (திரு).

x — x

இராகம் - பந்துவராளி. தாளம் - ஆதி.

பல்லவி.

/தாயே தாமரைக் கண்ணாளே நீ //. /அருள் புரிவாயோ கதம்ப வனத்தினிலே//

அ.ப.

/ஸ்ரீ சக்ர ரூபிணி, சிம்ம வாஹினி// /சங்கரர் துதித்திட்ட ராஜராஜேஸ்வரி// (தாயே)

சரணம்

/ஞான சம்ப[illegible]

'Sripathi',
Veerabhadra Gardens,
Pattom Palace P.O.,
Thiruvananthapuram - 695 004
Phone : 0471 - 445563, 447609

*K. S. Nandhini Krishnan*

இராகம் - ஸுப பந்துவராளி. தாளம் - ஆதி.

பல்லவி.

|; சங்கடம் நீக்கிடவே |; சிங்கார/மாய் நீ வா||.|; சிம்ம வாஹனத்தில் ஏறிப் பாய்ந்தே நீ வா||.

அ. ப.

|; பக்தியின் சிறப்பினை|; உலகிற்கெல்லாம் உணர்த்த||.|; துக்கமெல்லாம் போக்கிட |; வலிதாய்விரைவே வா || (சங்கடம்).

சரணம்

|; மனமும் மானமும்/; தனமும்/தானமும்||.|; யாவும் நீயே/; என உணர்ந்தேனே||
|; அன்னையே எனை இரக்ஷிப்பாய்/; அருளிடு/வந்திடுவாய்|| |; ஸ்வர்ண காமாக்ஷி/என் துயரெல்லாம் துடைத்திடுவாய்
(சங்கடம்)

x — x

பேகடா - இராகம் . தாளம் - ஆதி.

பல்லவி.

|சிவ சங்கரி அம்பா/ சிவகாமஸுந்தரி||./பவ சங்கரி அம்பா/ஸ்ரீ த்ரிபுரஸுந்தரி||

அ. ப.

|பரமேஸ்வரி ராஜ/ராஜேஸ்வரி||./ஸர்வாதார மந்த்ரிணி மலய வாஸினி||
(சிவ)

சரணம்

|காமேஸ்வரி அகிலாண்டேஸ்வரி||. |; ஸ்ரீசக்ர வாஸினி புவனேஸ்வரி||
|காதம்பரி அன்ன பூர்ணேஸ்வரி || |; பைரவி ஸ்ரீ ஸ்வர்ண காமாக்ஷி||.
(சிவ)

x — x

'Sripathi',
Veerabhadra Gardens,
Pattom Palace P.O.,
Thiruvananthapuram - 695 004
Phone : 0471 - 445563, 447609

*K. S. Nandhini Krishnan*

## தாலாட்டு

1) ஜோ ஜோ கண்ணுறங்காய் கண்மணியே நீ உறங்காய், தங்க மின்மினியே நீ உறங்காய் (ஜோ ஜோ)

2) கமலத் திருவிழிகள் யோக நித்திரையில், கருமை பொழிந்திட்ட கனகக் கமலமே (ஜோ ஜோ)

3) தாலேலோ தாலேலோ, நவரத்ன தொட்டிலிலே, தாலேலோ தாலேலோ பட்டு மெத்தையிலே (ஜோ ஜோ)

4) உறங்கிக் கிடந்த என்றன் ஊன் உயிரெலாம் / உருகி உணர்ந்திடவே பாட்டாய் உதிர்ந்திடவே (ஜோ ஜோ).

5) பாட்டாய் உதிர்ந்ததென்ன, பல கோடி நாளாய்/நினைந்து உதிர்த்ததென்ன ஞானப்பொருளே (ஜோ ஜோ).

x x